## தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (19.10.2016 முதல் 23.10.2016)

**அறிக்கைஎண் :084/2016** **தேதி: 18.10.2016**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 20°செ முதல் 27°செ ஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 15°செ முதல் 20°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 9°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. பொதுவாக தமிழ்நாட்டில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை: ஈரோடு (19.10.2016 முதல் 23.10.2016)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் ஐந்து நாட்களுக்கும் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 34°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 78 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 6 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 19.10.16 | 0 | 34 | 24 | 6 | 78 | 60 | 6 | தெற்கு |
| 20.10.16 | 0 | 34 | 24 | 6 | 78 | 60 | 6 | தெற்கு |
| 21.10.16 | 0 | 34 | 24 | 6 | 78 | 60 | 6 | தெற்கு |
| 22.10.16 | 0 | 34 | 24 | 6 | 78 | 60 | 6 | தெற்கு |
| 23.10.16 | 0 | 34 | 24 | 6 | 78 | 60 | 6 | தெற்கு |

**வேளாண் அறிவுரை**

- மல்லிகை மொட்டில் புழு காணப்படுவதால் மோனோகுரோட்டபாஸ் 36 WSC மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் 2 மி.லி என்ற அளவில் கலந்து உடன் தெளிக்கவும்.
- ரோஜா செடியினை கவாத்து செய்வதற்கு ஏற்ற வானிலை காணப்படுவதால் உடன் கவாத்து செய்து, வெட்டுபட்ட பகுதியில் போர்டோ கலவையினைக்கொண்டு பூசவும்.
- வரும் நாட்களில் குறைந்தபட்ச வெப்பநிலை குறைய வாய்ப்புள்ளதால் சம்பா நெல்பயிருக்கு சிங்க்சல்பேட் 0.5% + யூரியா 1% கலந்து தெளிக்கவும். சிங்க் குறைபாடு தொடர்ந்து தென்பட்டால் 15 நாட்கள் கழித்து மீண்டும் தெளிக்கவும்.
- இறவை மஞ்சள் 155 நாட்கள் வயதில் இருப்பதால் கடைசி மேலுரமாக 1 ஹெக்டருக்கு 55 கிலோ யூரியா மற்றும் 30 கிலோ பொட்டாஷ் கலந்து இட்டு நீர்பாசனம் செய்யவும்.

**குறுஞ்செய்தி**

- வரும் நாட்களில் குறைந்தபட்ச வெப்பநிலை குறைய வாய்ப்புள்ளதால் சம்பா நெல்பயிருக்கு சிங்க்சல்பேட் 0.5% + யூரியா 1% கலந்து தெளிக்கவும். சிங்க் குறைபாடு தொடர்ந்து தென்பட்டால் 15 நாட்கள் கழித்து மீண்டும் தெளிக்கவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்
த.நா.வே.ப.கழகம், கோவை.